## திராவிட இயக்க இதழ்கள் - ‘தஞ்சை அமுதம்’

திராவிடர் கழகத் தொண்டராகவும், பிறகு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவராகவும் இருந்து, 1967-ஆம் ஆண்டு திருத்துறைப்பூண்டி தொகுதியிலிருந்து சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், முத்துப்பேட்டை ந.தருமலிங்கம். தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவராகவும் இருந்த அவரால் தொடங்கப்பட்ட இதழ், ‘தஞ்சை அமுதம்’.

1969-ஆம் ஆண்டு ஜனவரியில் தை முதல் நாள் அன்று இந்த இதழ் தொடங்கப்பட்டது. இப்படி ஓர் இதழ் வெளிவர இருப்பது குறித்து, 1968-ஆம் ஆண்டு டிசம்பரில் வெளிவந்த ‘நம் நாடு’ இதழில் அறிவிப்பு ஒன்றும் வெளியாகி இருக்கிறது. இது மாத இதழாக வெளிவந்தது. அநேகமாக 1974-ஆம் ஆண்டு வரை இந்த இதழ் வெளிவந்திருக்கலாம் என்று அறியப்படுகிறது.





‘நினைத்துப் பார்க்கின்றேன்
நெடுமரமாய் நிற்கின்றேன்!
நினைவில் நின்றவளோ
நெடுந்தூரம் சென்றுவிட்டாள்!
மணந்தால் அவனைத்தான்
இல்லையெனில், மரணந்தான்!
என்றவளும் சூளுரைத்தாள்.
ஏற்கவில்லை, சமுதாயம்!
சாதியெனும் கொடுநோயால்
சண்டாளர் தடைவிதிக்கப்
பாதியிலே பாவையவள்
பாழுலகை மறந்துசென்றாள்!
இருமனங்கள் இணைவதை
இனியாரும் தடைசெய்தால்
இடிவிழுந்த பனைமரம்போல்
இவ்வுலகம் மடியவேண்டும்!

சாதி மறுப்புத் திருமணம் செய்துகொள்ள விரும்பிய காதலர்கள் பிரிந்த துயரைச் சொல்லும் இந்தக் கவிதை, 1970-இல் இந்த இதழில்தான் வெளியானது. இன்றைக்கும் பொருத்தமாக உள்ளது இல்லையா..?

பத்திரிகை ஆசிரியராக மட்டுமல்லாது, ஈழத்திலிருந்து வெளிவந்த ‘அண்ணா’ எனும் இதழுக்கு விநியோகஸ்தராகவும் தருமலிங்கம் இருந்திருக்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்





கு.பன்னீர்செல்வம்

### திடீர் பயணமும், திட்டமிடாத சந்திப்பும்…

1986-ஆம் ஆண்டு சென்னை, அன்பகத்தில் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. நேரம் எதுவும் கேட்காமல் நேரடியாக தலைவர் கலைஞரைச் சந்தித்தோம். “ஒரு ஃபோட்டோ எடுத்துக் கொள்கிறோம் அய்யா” என்றபோது, “வாங்கய்யா” என்று வாஞ்சையோடு அழைத்து, புகைப்படம் எடுக்கச் சொன்னார். உடன் இருப்பவர், எனது கழக நண்பர் கிருஷ்ணன். அப்போது, அன்பகத்தில் உசேன்பாய், நீலநாராயணன், ம.வே.நாராயணசாமி ஆகியோரும் உடன் இருந்தனர். “இன்றைய கழகத் தலைவர் தளபதியைப் பார்க்க வேண்டும்” என்று நாங்கள் கூறியபோது, “தற்போது அவர் ஊரில் இல்லை. நீங்கள் பத்திரமாக கோயம்புத்தூருக்குப் போங்கள்” என்று கலைஞர் கூறி, அனுப்பி வைத்தார்.

**- கு.பன்னீர்செல்வம்,**
**காளப்பட்டிப் பகுதிக் கழகம், கோவை வடக்கு**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நாட்டின் கண்மணிகளே..!

1950-ஆண்டு, கழகத்தின் முதல் மாநில மாநாட்டுப் பேச்சை அறிஞர் அண்ணா தொடங்குகிறபோதும், முடிக்கிறபோதும், “கண்ணீர்த் துளிகளே, நாட்டின் கண்மணிகளே!” என குறிப்பிட்டார். இப்படிப் பேசியது கழகத்தினரின் உள்ளத்தை உருக்கிவிட்டது. அதைத் தொடர்ந்து“கட்டளை இடுபவன் அல்ல- அன்பிற்குக் கட்டுப்பட்டவன் நான்!” என பேச்சைத் தொடர்ந்தபோது கரவொலி விண்ணைப் பிளந்தது.

## முதன் முதலில் 16

**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது…**

# ‘உளமார’ உறுதி ஏற்போம்!



2024-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, ஒன்றியத்தில் சந்திரபாபு நாயுடு, நிதிஷ் குமார் ஆகியோர் தயவில் ஆட்சி அமைத்திருக்கும் பா.ஜ.க. கூட்டணியைச் சேர்ந்தோர் கடந்த வாரம் அமைச்சர்களாகப் பதவி ஏற்றுக்கொண்டனர். அவர்களில் பெரும்பான்மையோர் ‘கடவுளின் பெயரால்’ உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், தமிழ்நாட்டில், திராவிட இயக்கப் பாரம்பரியத்தின் வழி வந்தவர்களெல்லாம் எப்போதும் ‘உளமார’ உறுதி கூறித்தான் பதவி ஏற்கிறார்கள். அந்த மரபை, முதன்முதலில் தொடங்கி வைத்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

1967-ஆம் ஆண்டு மார்ச் 6 அன்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலான தி.மு.க, தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரையில், பதவியேற்பு நிகழ்வுகளின்போது அனைவரும் ‘கடவுளின் பெயரால்’தான் என உறுதிமொழி ஏற்பது வழக்கமாக இருந்தது. சரி ஏன் கடவுளின் பெயரால்..? காரணம், கடவுளுக்கு மீறிய பெரிய சக்தி எதுவும் இல்லை என்ற நம்பிக்கைதான்.

**‘மனசாட்சிப்படி’ உறுதி ஏற்கும் தி.மு.க. இருக்கும் தமிழ்நாடு, அமெரிக்காவை பல நூறு ஆண்டுகளுக்கு சிந்தனைத் தளத்தில் முந்தி நிற்கிறது.**

ஆனால், கடவுளை விடவும் ஒரு பெரிய சக்தி உண்டு என்று காட்டினார் அண்ணா. அதனால்தான் அவர் முதலமைச்சராகப் பதவியேற்கும்போது, தமிழில் ‘உளமார’ உறுதிமொழி ஏற்றார். ‘உளமார’ என்றால், நிறைந்த உள்ளத்தோடு என்று பொருள். ஆங்கிலத்தில் ‘உளமார உறுதி ஏற்கிறேன்’ என்பது ‘இன் தி நேம் ஆஃப் கான்சையன்ஸ்’ என்று கூறப்படுகிறது. இங்கே ‘கான்சையன்ஸ்’ என்றால், ‘மனசாட்சி’ என்று பொருள்.

இவ்வாறு ‘மனசாட்சியின் படி’ உறுதிமொழி ஏற்பதற்கு அண்ணா இப்படி விளக்கம் அளித்தார்: “கடவுளின் பெயரால் பதவி ஏற்றால், அவரிடம் வேண்டுதல் / பரிகாரம் / காணிக்கை கொடுத்து சமரசம் செய்ய வாய்ப்பு உள்ளது. ‘உளமார’ என்றால் மனசாட்சியுடன் சமரசம் செய்ய வாய்ப்பில்லை”.

ஆம், கடவுளைக்கூட ஒருவர் ஏமாற்றிவிடலாம். ஆனால், மனசாட்சியை யார் ஏமாற்ற முடியும்.? அண்ணாவைப் பின்பற்றி அவரது அமைச்சரவை மொத்தமும் ‘உளமார’ உறுதி கூறி பதவியேற்றுக் கொண்டது. அண்ணாவுக்குப் பிறகு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஆட்சி அமையும் போதெல்லாம் அவரது அமைச்சரவை ‘உளமார’ உறுதி கூறித்தான் பதவியேற்கும். அ.தி.மு.க. தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சியின்போது கூட அண்ணா தொடங்கி வைத்த மரபுதான் பின்பற்றப்பட்டது.

ஆனால், அவருக்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள் ‘கடவுளின் பெயரால்’ உறுதி ஏற்க, மொத்த அடிமைக் கூட்டமும் 2001, 2011, 2016-ஆம் ஆண்டுகளில் அவர்கள் பதவி ஏற்கும் போதெல்லாம் அதையே தொடர்ந்தனர். 2006-ஆம் ஆண்டில் தி.மு.கழகம் பதவி ஏற்றபோது ‘உளமார உறுதி ஏற்கிறேன்’ என்ற சொற்கள் காதில் விழுந்தன. அதன்பிறகு அந்தச் சொற்கள் ஒலித்தது 2021-ஆம் ஆண்டு மே 7 அன்று ‘திராவிட மாடல் அரசு’ நாயகர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோதுதான்..!

வல்லரசு நாடான அமெரிக்காவில், இன்றளவும் ‘கடவுளின் பெயரால்’தான் உறுதிமொழி ஏற்கப்படுகிறது. அப்படிப் பார்த்தால் ‘மனசாட்சிப்படி’ உறுதி ஏற்கும் தி.மு.க. இருக்கும் தமிழ்நாடு, அமெரிக்காவை பல நூறு ஆண்டுகளுக்கு சிந்தனைத் தளத்தில் முந்தி நிற்கிறது. திராவிட இயக்கம் தந்த அந்தச் சிந்தனையை வருகின்ற தலைமுறைக்கும் நாம் முன்னெடுத்துச் செல்வோம் என்று ‘உளமார’ உறுதி ஏற்போம்..!

…அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** 16

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி…**

# கட்சிக்கார துணை வேந்தர்!

வரலாற்றுத் துறையில் சிறந்து விளங்கியவர்கள் ‘தன் வரலாறு’ எழுதினால் எப்படி இருக்கும்? அதிலும் தி.மு.கழகத்தின் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியவர் ‘தன் வரலாறு’ எழுதினால், எப்படி இருக்கும்? மாணவப் பருவத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டவர், பல்கலைக்கழகப் பதிவாளர், துணை வேந்தர் என்று பதவிகள் பலவற்றை அலங்கரித்தாலும், தன்னை தி.மு.க.காரர் என்று தயங்காமல் சொல்லிக் கொண்டவர், ‘தன் வரலாறு’ எழுதினால் எப்படி இருக்கும்?

**பேராசிரியர் அ.இராமசாமி அவர்களுடைய இந்த தன் வரலாற்று நூல் வரலாற்றில் தனக்கான இடத்தைத் தேடிக் கொள்ளும்.**




மேற்சொன்ன தகுதிகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட பேராசிரியர் அ.இராமசாமி எழுதி, சமீபத்தில் வெளியாகி இருக்கும் ‘தன் வரலாறு’ நூல்தான் ‘ஒரு வரலாற்று ஆசிரியரின் வரலாறு’. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகத்தார் இந்நூலை வெளியிட்டுள்ளார்கள்.

பள்ளிப் பருவம் முதலே கழக உணர்வு, இந்நூல் ஆசிரியரை எப்படியோ தொற்றிக் கொண்டுவிட்டது. திராவிடர் மாணவர் முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இணைந்து, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் மிகத் தீவிரமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். கல்லூரியில் மாணவப் பருவம்தொட்டு படிப்படியாக முன்னேறி, அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தராக உயரும் வரையில் கழகத்துடன், தான் கொண்டிருந்த உறவை இந்நூலில் விவரிக்கிறார். அரசுப் பணியிலிருந்து கொண்டே தேர்தல் சமயங்களில் விடுப்பு எடுத்து கட்சி வேலை செய்யும் அளவுக்கு இவர் கொண்டிருக்கும் கழகப் பற்று, வாசிக்கும்போது வியப்பை ஏற்படுத்துகிறது.

இந்நூலில் கூறப்படும் ஏராளமான சம்பவங்கள், கழகம் கடந்து வந்த முள் பாதையை நமக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றன. சாதாரண கட்சிக்காரராக இருந்து, தொடர்ச்சியாக நான்கு முறை தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவில் இடம்பெறும் வாய்ப்பு, 2020-ஆம் ஆண்டு முப்பெரும் விழாவில், பேரறிஞர் அண்ணா விருது, புதிய கல்விக் கொள்கை ஆய்வுக் குழுவில் இடம் என அவருக்கான கட்சி ரீதியிலான அங்கீகாரங்கள் தேடி வந்தன.

“இளைஞர்கள் பதவிகளைக் கருத்தில் கொள்ளாமல், கட்சிப் பணி ஆற்றவேண்டும், காத்திருங்கள் காலம் வரும்; பதவிகள் உங்களைத் தேடி வரும்!” என்பதைத் தனது வாழ்க்கைப் பாடமாகவே கழகத்திலுள்ள இளைஞர்களுக்குச் சொல்கிறார் நூலாசிரியர்.

தி.மு.க கழக வரலாறு, மொழிப்போர் வரலாறு உட்பட ஆங்கிலத்திலும் தமிழிலும் 20-க்கும் மேற்பட்ட புத்தகங்கள், நாளிதழ்களில் ஏராளமான அரசியல் கட்டுரைகள் என தன்னுடைய அறிவுச் செயல்பாடுகளையும் இந்நூலில் பதிவு செய்துள்ளார். இன்றைய கழகத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் க.அன்பழகன், பண்பாளர் பி.டி. ஆர், பொருளாளர் டி.ஆர்.பாலு ஆகியோருடன் இந்நூல் ஆசிரியர் கொண்டிருந்த நட்பும் உறவும் இந்நூல் முழுக்க விரவிக் கிடக்கின்றன.

மக்கள் பிரதிநிதியாக வேண்டும் என்கிற தன்னுடைய ஆசை, நிராசை ஆனதைப் புன்னகையோடு கடக்கிறார். தி.மு.கழகத்துக்குத் தான் அளித்துள்ள அறிவுக் கொடைக்கு வரலாற்றில் நிரந்தர இடம் உண்டு என்ற சமாதானத்தோடு இந்நூலை முடிக்கிறார். போராட்டங்கள், ‘மாநாட்டுக் குறிப்புகள்’, ‘தேர்தல் வெற்றிகள்’, ‘சுய அனுபவக் குறிப்புகள்’ என ஒரு மனிதரின் வாழ்க்கையில் அடங்கி இருக்கும் இயக்க வரலாற்றை அழுத்தமாகச் சொல்கிறது இந்நூல்.


பேராசிரியர் அ.இராமசாமி அவர்களுடைய இந்த தன் வரலாற்று நூல் வரலாற்றில் தனக்கான இடத்தைத் தேடிக் கொள்ளும்.

…வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

512

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131